(வளரும்)

---

# தேசத்தை வீடாக எண்ண வேண்டும்

காரை. செ. சுந்தரப் பிள்ளை

தேனாறு பாலாறு பாயும் செல்வச்
சிறப்புள்ள நாடாக ஈழம் தன்னை
ஏனாக்க முடியாது; இங்கே யுள்ள
எவராலும் ஆகாது என்ற வெண்ணம்
போனாலே போதும்பின் புதிய வாழ்வு
பொலியாதோ பொருளெல்லாம் புசிப்ப தற்கே
தானாகக் கிடையாதோ தரித்தி ரந்தான்
சற்றேனும் இல்லாமல் ஓடி டாதோ.

கல்லூரி வாசல்தனை மிதித்த பின்னர்
காற்சட்டை போட்டதொழி லன்றி வேறு
நல்லதொழி லெதுவாக இருந்த போதும்
நாடாத வாலிபரால் நமது நாடு
அல்லலுறு கின்றதென மேடை தோறும்
அழுவோரும் அறிக்கைபல விடுகின் றோரும்
சொல்வதன்றிச் செயலேதும் புரிவ தில்லை
சுரண்டுகிற எண்ணத்தை விடுவ தில்லை

எங்குசென்று பார்த்தாலும் லஞ்சம்; இஃதை
எடுப்போரும் கொடுப்போரும் இல்லை யானால்
பங்கமிலா திங்குள்ள கரும மெல்லாம்
படிப்படியாய் நிறைவேறும்; பண்பு மோங்கும்
தங்கள்தங்கள் காரியத்தைத் தாமே சென்று
தடையின்றிச் செய்துவர முடியும்; ஆனால்
இங்குள்ளோர் உளமின்னும் மாற வில்லை
உலுப்புகிற சிக்கலொன்று மோயவில்லை

காளையரும் கன்னியரும் கழனி தோறும்
கன்னலொடு செந்நெலினை விளைக்க வேண்டும்
பாளைநிறை தெங்கோடு நுங்கு பாக்குப்
பார்த்தவிட மெங்குமழ கூட்ட வேண்டும்
ஆளையேய்த்துப் பிழைப்போர்கள் மாய வேண்டும்
ஆலைகளும் சாலைகளும் ஓங்க வேண்டும்
வேளைதவறாது தொழி லாற்ற வேண்டும்
வெறும்பேச்சு வீரரிலா தொழிய வேண்டும்.

உழைத்துண்ண வேண்டுமெனும் எண்ணம் இங்கே
யுருவாகா திருக்கின்ற வரைக்கும்; மக்கள்
பிழைக்கின்றார் என்றிட்டால் அதிற்பா திப்பேர்
பிறராலே வாழ்கின்றா ரென்ப தாகும்
இளைக்கின்ற தேகத்தோ டெலும்பாய்ப் போகும்
ஏழைநிலை யுயர்வாக வேண்டு மானால்
திளைக்கின்ற செல்வத்தில் இருப்போ ரெல்லாம்
தேசத்தை வீடாக எண்ண வேண்டும்.